DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:S.C.No.53/2022
Prosecution Witness P.W.15

Name : **திரு.சந்திரமௌலி** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

A1, A2, A4, A5 ஆஜர், A3, A8 ஆஜரில்லை அவருக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது. A6, A7 Died.

**நாள்: 03.02.2026.**

(சாட்சி காணொளி காட்சி மூலம் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் தற்போது சென்னையில் உள்ள ரிலையன்ஸ் ஜியோ இன்ஃபோகாம் நிறுவனத்தில் டெப்டி ஜெனரல் மேனேஜர் மற்றும் தமிழ்நாடு புதுச்சேரி ஸ்டேட் நோடல் ஆபீஸராக பணிபுரிந்து வருகிறேன். தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், காவல் ஆய்வாளர் அவர்களிடமிருந்து ஆண்டிப்பட்டி காவல் நிலைய குற்ற எண்.29/2021 சம்பந்தப்பட்ட வழக்கில் 01.03.2021-ம் தேதியிட்ட கடிதம் கிடைக்கப்பெற்றது. அதில் இரண்டு ஜியோ நம்பர்களான 6383494454 மற்றும் 9344840866 என்ற இரண்டு எண்கள் குறித்த 15.01.2021-ம் தேதியன்று காலை 10.00 மணியிலிருந்து அன்றைய தினம் இரவு 22.00 மணி வரை காண சி.டி.ஆர் அழைப்புகள் விபரங்கள் மற்றும் கஸ்டமர் அப்ளிகேஷன் ஃபார்ம் ஆகியவை 65 (b) சான்றிதழ் உடன் கோரப்பட்டிருந்தது அது சம்பந்தமான விபரங்களை நான் 04.03.2021-ம் தேதியிட்ட எனது கடிதம் வாயிலாக ஆண்டிப்பட்டி காவல் ஆய்வாளர் அவர்களுக்கு 65(b) சான்றிதழ் கஸ்டமர்

அப்ளிகேஷன் ஃபார்ம் மற்றும் சி.டி.ஆர் ஆகியவற்றை லொகேஷன் டீடெயில்ஸ் உடன் நான் அனுப்பினேன்.

2. அந்த நான்கையும் நான் அனுப்பிய கடிதத்தில் வரிசைப்படுத்தி குறிப்பிட்டுள்ளேன். எனது கடிதம், கஸ்டமர் அப்ளிகேஷன் ஃபார்ம், கால் டீடெயில்ஸ் ரெக்கார்ட், செல் ஐடி அட்ரஸ் லொகேஷன் டீடெயில்ஸ் அ.சா.ஆ.20 (வரிசை) மொபைல் போன் நம்பர் 63 83 49 44 54 என்ற ஃபோன் நம்பர் திரு. முத்துமணி என்பவர் பெயரில் த/பெ.கணேசன், நம்பர் 15, கீழத்தெரு, குள்ளப்புரம், வரதராஜநகர், பெரியகுளம், தேனி என்ற விலாசத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. 20.03.2019–ஆம் தேதியிலிருந்து மேற்கண்ட செல்போன் ஆனது ஆக்டிவேட் செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது போன் நம்பரான 9344840866 என்ற எண்ணானது திரு.செல்வமணி த/பெ. சோமசுந்தரம், கிழக்கு தெரு, குள்ளப்புரம், பெரியகுளம், தேனி என்ற முகவரிக்கு வழங்கப்பட்டுள்ளது. 22.08.2019–ம் தேதியிலிருந்து மேற்கண்ட எண்ணானது ஆக்டிவேட் செய்யப்பட்டுள்ளது.

3. 9659090871 என்ற எண்ணிற்கு மேற்கண்ட 2 எண்களில் இருந்து எத்தனை மணிக்கு அன்றைய தினம் அழைப்பு சென்றுள்ளது என்ற விபரத்தை அந்த சி.டி.ஆர் பதிவுகள் வாயிலாக பார்த்து என்னால் சொல்ல முடியும்.

4. 63834 94454 என்ற எண்ணில் இருந்து 9659090871 என்ற எண்ணிற்கு 15–ம் தேதியன்று மாலை 17.02 மணிக்கு மற்றும் 17.10 மணிக்கு ஒரு அவுட்கோயிங் மற்றும் இன்கமிங் காலாக வந்துள்ளது எவ்வளவு நேரம் இரண்டும் அழைப்புகளும் பேசப்பட்டுள்ளது என்றால் 346 வினாடிகளும் 254 வினாடிகளும் அவுட்கோயிங் மற்றும் இன்கமிங் கால்களாக பேசப்பட்டுள்ளது. அந்த சமயத்தில் அந்த செல்போன் 63834 94454 என்ற செல்போனில் டவர் லொகேஷன் குள்ளபுரம் கிராமம், பெரியகுளம் தாலுக்கா என காட்டுகிறது.

5. அதன் பிறகு 18.33 மணிக்கு அவுட்கோயிங் காலாக 121 வினாடிகள் பேசப்பட்டுள்ளது, அப்போது டவர் லொகேஷன் குள்ளபுரம் கிராமம், பெரியகுளம் தாலுகா என காட்டுகிறது.

6. அதன் பிறகு 19.03 மணிக்கு அதே நாளன்று இன்கமிங் கால் 114 வினாடிகள் மேற்கண்ட எண்ணிற்கு அந்த ஃபோனிலிருந்து வந்துள்ளது. அப்பொழுது டவர் லொகேஷன் உள்ள புரம் கிராமம் பெரியகுளம் தாலுகா, 19.06 மணிக்கு ஒரு அவுட்கோயிங் கால் 91 வினாடிகள் பேசப்பட்டுள்ளது, அதுவும் அதே லொகேஷன். அதே நாளில் 19.32 மணிக்கு இன்கமிங் கால் மேற்கண்ட எண்ணிற்கு வந்துள்ளது அதில் 152 வினாடிகள் பேசப்பட்டுள்ளது. அதுவும் அதே டவர் லொகேஷன் தான்.

7. 93448 40866 என்ற எண்ணிலிருந்து மற்றொரு எண்ணான 9659090871 என்ற எண்ணிற்கு மொத்தம் ஐந்து அழைப்புகள் வந்துள்ளது. அதில் முதல் இன்கமிங் காலாக பெறப்பட்டுள்ளது 17.15 மணிக்கு 238 வினாடிகள் பேசப்பட்டுள்ளது. அதன் டவர் லொகேஷன் குள்ளபுரம் கிராமம், பெரியகுளம் தாலுக்கா. 2–வது அழைப்பானது அதே நாளன்று 17.58 மணிக்கு அவுட்கோயிங் கால் 18 வினாடிகள் பேசப்பட்டுள்ளது. அப்போதும் டவர் லொகேஷன் அதேதான். 3–வது அழைப்பானது 18.45 மணிக்கு அவுட்கோயிங் காலாக 94 வினாடிகள் பேசப்பட்டுள்ளது, அதே லொகேஷன் தான். 4–வது காலானது 19.10 மணிக்கு இன்கமிங் காலாக 234 வினாடிகள் பேசப்பட்டுள்ளது, அதே லொகேஷன். 5–வது காலாக 19.35 மணிக்கு இன்கமிங் காலாக 469 வினாடிகள் அதே லொகேஷனில் பேசப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக நான் சான்றிதழ் வழங்கி உள்ளேன். ஆய்வாளர் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார். குள்ளபுரம் டவர் லொகேஷன் என்பது எவ்வளவு தூரம் வரும் என்று குறிப்பிட்டு நாள் சொல்ல முடியாது. பொதுவான ரேடியஸ் 500 மீட்டரில் இருந்து 1500 மீட்டர் வரை வரும். சில டவர்ஸ் இதைவிட அதிகமாக கூட வரும். ஆய்வாளர் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

1. இந்த வழக்கு சம்பந்தமாக கஸ்டமர் அப்ளிகேஷன் ஃபார்ம் சம்பந்தமாக தனிப்பட்ட முறையில் 65 (B) சான்றிதழ் நான் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல, எலக்ட்ரானிக் டேட்டா என்று நான் குறிப்பிட்டு எல்லா விவரங்களுக்கும் சேர்த்து ஒரே சான்றிதழாக நான் வழங்கி உள்ளேன். குறிப்பாக கஸ்டமர் டீடெயில்ஸ் நான் டவுன்லோட் செய்து சான்றிதழ் வழங்கவில்லை என்றால் எலக்ட்ரானிக் டேட்டாவில் அது கவராகி வருவதால் தனியாக அதற்கு சான்றிதழ் வழங்க வேண்டிய அவசியமில்லை.

2. Hash Value எதுவும் தனிப்பட்ட முறையில் நான் வழங்கவில்லை என்றால் சரிதான். Hash Value கொடுக்க வேண்டும் என்பது அந்த சமயத்தில் கட்டாயம் கிடையாது. தற்போது நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் போது கூட நான் Hash Value பார்வையிட்டேனா என்றால் எதுவும் நாங்கள் இதற்கு உபயோகப்படுத்தவில்லை. எங்கள் சி.டி.ஆர் மெயின் சர்வர் என்பது மும்பையில் உள்ளது என்றால் சரிதான். அந்த மெயின் சர்வரில் இருந்து தேவைப்படும் விவரங்களை எந்த கம்ப்யூட்டரில் பதிவிறக்கம் செய்து கொடுத்தேன் என்ற விபரத்தை நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் 65(b) சான்றிதழில் கம்ப்யூட்டர் என மென்ஷன் பண்ணி உள்ளேன்.

3. கம்ப்யூட்டர் பற்றிய விபரங்களை செக்யூரிட்டி காரணங்களாக நாங்கள் எப்போதும் குறிப்பிடுவது கிடையாது. இந்த வழக்கு தொடர்பாக இரண்டு நபர்களின் டவர் லொகேஷன் குள்ளபுரம் கிராமம் பெரியகுளம் என்றுதான் உள்ளதென்றால் மேலே குறிப்பிட்ட பத்து கால்கள் குறித்த விபரங்கள் மட்டுமே நான் விசாரணையில் சொல்லியுள்ளேன். 15 ம் தேதியன்று மேற்கண்ட எண்களில் இரவு சுமார் 8:30 மணிக்கு மேல் எத்தனை அவுட்கோயிங் அழைப்புகள் செல்லப்பட்டுள்ளது என்றால் 93448 40866 என்ற எண்ணில் இருந்து அவுட்கோயிங்கானது இரவு 8:30 மணிக்கு மேல் எதுவும்

செல்லவில்லை. அதேபோல் போன் நம்பர் 6383494454 என்ற எண்ணிலிருந்து இரவு 8:30 மணிக்கு மேல் அவுட்கோயிங் எதுவும் சொல்லவில்லை.

4. 8.00 மணிக்கு மேல் ஏதேனும் அழைப்புகள் சென்றுள்ளதா என்றால் 6383494454 என்ற எண்ணிலிருந்து 8.00 மணிக்கு மேல் அவுட்கோயிங் கால் எதுவும் செல்லவில்லை. இன்கமிங் கால் ஏதேனும் வந்துள்ளதா என்றால் 4 இன்கமிங் கால் வந்துள்ளது. அப்போது டவர் லொகேஷன் எங்குள்ளதென்றால் குள்ளபுரம் கிராமம், பெரியகுளம் தாலுக்கா என்று உள்ளது.

5. மற்றொரு எண்ணான 9344840866 என்ற எண்ணிற்கான அழைப்புகள் 8.00 மணிக்கு மேல் ஏதேனும் வந்துள்ளதா என்றால் 6 அழைப்புகள் அவுட்கோயிங் கால்களாக சென்றுள்ளது. அந்த சமயத்தில் டவர் லொகேஷன் குள்ளப்புரம் கிராமம், பெரியகுளம் தாலுகா. 9659090871 என்ற ஃபோன் நம்பர் எந்த கம்பெனி உடையது என்று என்னால் சொல்ல முடியாது, அது எங்களுடையது கிடையாது. எனது அறிக்கை முழுமை பெறாத அறிக்கை என்றால் சரியல்ல. நான் முறையான சட்ட விதிகளை பின்பற்றி சான்றிதழ் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. ஜியோ நிறுவனத்தின் சார்பாக சாட்சியம் அளிப்பதற்கு எந்த வித ஆவணங்களும் ஆஜர் செய்யாமல் நான் அளிக்கும் சாட்சியம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.03 18:36:36 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.